
ௐ

சிவமயம்

# கோயிலமைப்பும்
# கிரியையும் வழிபடுமுறையும்



ஆக்கம்:

ன் பொன்-கந்தசாமி

வெளியீடு:

பொன்னம்பலம் அவர்கள்

னபதி களஞ்சியம்

வீதி, — பண்டத்தரிப்பு.

மாதகல் இந்துசமய அபிவிருத்திச் சங்க வெளியீடு

எண்: 19.

1574

JPL

C1574

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

கணபதி துணை

KOHA JPL

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# கோயிலமைப்பும் கிரியையும் வழிபடுமுறையும்

1574 2

வித்துவான் பொன். கந்தசாமி

84109

வெளியீடு:

கணபதி களஞ்சியம்
மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.

மாதகல்
இந்துசமய அபிவிருத்திச் சங்க வெளியீடு எண் . 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84109C

KOHA
194

கணபதி களஞ்சியம் வெளியீடு - 2.

1990 வைகாசி.

பதிப்புரிமையுடையது.

# பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | திருக்கோயில் | ... | 7 |
| 2. | கடவுள் | ... | 13 |
| 3. | பிரதிட்டைசெய்தல் | ... | 15 |
| 4. | திருவிழா | ... | 22 |
| 5. | திருக்கோயில் வழிபாடு | ... | 31 |
| 6. | விரதம் | ... | 36 |
| 7. | பஞ்சபுராணம் | ... | 38 |

சேர்வு எண்
வகுப்பெண் 294-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ துர்க்கா ஸகாயம்

# அணிந்துரை

வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்று நுண்ணியதாக அமைந்து விளங்கும் மெய்ப்பொருளை, கற்றோரும், மற்றோரும் அனுபவிக்கும் வண்ணம் பேரானந்த வாழ்வைத் தருவிப்பது ஆலயங்களும், அதன் விழாக்களுமாம். ஞானிகளைப் பொறுத்தமட்டில் "ஓம் இத்தியாதி மனோச்சர துவனிகதம் சிவம்" எனும் சித்தாந்த வாசகத்துக் கொப்ப அவர்களால் அறியப்படும் பரம் பொருள், சரியா, கிரியா மார்க்கத்தினின்று வழிபடும் ஞானிகளல்லாதோரை ஆகமமாகி நின்றணைப்பான் என சிவபுராணம் கூறும். இவ்வாகமங்கள் இருபத்தெட்டினாலும் கூறப்படும் ஆலயம், ஆலய அமைப்பு. திருவுருவப் பிரதிஷ்டை, திருவிழா, வழிபாட்டு முறை இவற்றோடு கூடுதலாக திருமுறைகள் யாவும் சுருக்கமாகவும் இனிமையாகவும் தொகுக்கப்பட்டு இன்று உங்கள் முன் புத்தகமாக மலர்ந்துள்ளது.

வடமொழியில் அமைந்துள்ள ஆகமங்களை ஆராய்ந்து அதனை தமிழ்கற்றோரும் அறியும் வண்ணம் சைவத்திருக் கோயில் அமைப்பு, வழிபாடு, திருவுலா என்பன பற்றி வித்துவான். பொன் கந்தசாமி அவர்கள் ஆக்கிய இந் நூல், சாதாரண சமய உணர்வு கொண்டவர்களும் வாசித்து புரிந்து கொள்ளும் வண்ணம் அழகுதமிழில் இலகு நடையில் வெளிவருகின்றது. இதற்கு முன் இம்மாதிரி இரு நூல்கள், பேராசிரியர், கா. கைலாசநாதக் குருக்களாலும் கோப்பாய் சித்தாந்த பண்டிதர் பஞ்சாட்சரசர்மாவினாலும் வெளியிடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளன. ஆயினும் அந்தணர் அல்லாத ஒருவரின் பேரார்வத்தினால் வெளிவரும் இந்நூல், சிற்பசாத்திர நூல்கள், ஆகமங்கள் நாவலர் சைவவினாவிடை ஆகியவற்றின் முக்கியமான சாரங்களடங்கியதாக வெளிவருகின்றது.

ஸ்ரீ பொன் கந்தசாமி அவர்கள் தொடர்ந்தும், இப்பணியில் கூடிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, இந்நூலின் ஒவ்வொரு துணைத் தலையங்கத்திலும் தனிநூல்களை வெளியிட கலியுக வரதனாகிய மாதகல் நுணசை முருகனும் அவன் தன் அன்னையாம் தேவி ஸ்ரீ துர்க்கையும் நல்லருள் பாலிக்க பிரார்த்திக்கின்றேன்.

வேதாகம வித்யா பூஷணம்
**பிரம்ம ஸ்ரீ விஸ்வநாராயண சர்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பதிப்புரை

"கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி. கோயில் ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் பொருட்டு சாந்நித்தியராய் எழுந்தருளியிருக்கும் இடமாகும். ஆலயத்தைச் சிவன் என்று நினைந்து வழிபடும் இயல்பினர் சீவன் முத்தராவர்.

சைவமெய்யன்பர்கள் கோயிலில் நிகழும் அபிஷேகம், பூசை, விழாக்களின் கிரியை, வழிபடும் முறை என்பவைகளின் உண்மைப் பொருளான (தத்துவம்) சைவ சித்தாந்தத்தை அவசியம் அறிந்து கொள்ள வேண்டும். ஆதலின் அவைகளை விளக்கி இலகுவான உரை நடையில் இந்நூல் எழுதப்பட்டு உள்ளது. குறுகிய காலத்தில் இந்நூலை எழுதிய வித்துவான் பொன் கந்தசாமி அவர்களுக்கு என் மனமுவந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

கையெழுத்துப் பிரதியை மேற்பார்வை செய்வித்து அச்சிடுவதற்கு உறுதுணையாயிருந்த துர்க்காதேவி ஆலய நிர்வாக சபைத்தலைவர் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும் என்றும் மறவாத நன்றியைப் பாராட்டு கின்றேன்.

கையெழுத்துப் பிரதியை மேற்பார்வை செய்து நுண் மையவாய பல வேறுதிருத்தங்கள் செய்து அணிந்துரை வழங்கிய வேதாகம வித்யா பூஷணம் பிரம்ம ஸ்ரீ, விஸ்வ நாராயண சர்மா அவர்களுக்கும் அன்பு நிறைந்த வணக்கத் துடன் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நூலை ஒப்பு நோக்கி மிக விரைவில் அச்சிட்டுதவிய சுவர்ணு அச்சக உரிமையாளர் தம்பி ஜெகன் அவர்களுக்கும் அவர்தம் ஊழியர்களுக்கும் அன்பு நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

எமது நிலையம் முதன்முதலாக கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்களை வெளியிட்டது. அதனையடுத்து இந்நூலை வெளியிடுகின்றது.

மாதகல் இந்து சமய அபிவிருத்திச் சங்கம் வளர்ச்சி பெறுவதற்கும் குடும்பம் குடும்பமாக ஒவ்வொருவரும் வாழுவதற்கும் இந்நூல் இன்றியமையாதது என்பதைத் தாழ்மையுடன் தெரிவிக்கின்றேன்.

ஆ. பொன்னம்பலம்
கணபதி களஞ்சியம்
மாதகல் வீதி
பண்டத்தரிப்பு

1990ஆம் வைகாசி மீ
வெளியீடு 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
கணபதி துணை

# 1. கோயில்

"மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாகத்
தொடங்கினர்க் கோர்
வார்த்தை சொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே"

என்று தாயுமானவர் அருளிய வண்ணம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றையும் சிவபெருமானாக எண்ணி அவைகளை முறையாக வணங்குவோர் ஞானாசாரியரால் உண்மை விளக்கம்பெற்று முத்தியடைவர். பக்குவப்பட்ட ஆன்மாவை இறைவன் குருவடிவுடன் வந்து, ஆட்கொள்ளுவார்.

"ஆக்கை யாற் பயனென் அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையாலட்டிப் போற்றி என்னாதவிவ்
ஆக்கையாற் பயனென்"

மனிதனாகப் பிறந்து உடம்பை எடுத்தபயன் இறைவனை வழிபட வேண்டும் என்க மனிதராகப் பிறந்தவரனைவரும் கடவுளை வழிபாடு செய்தற்குரிய இடம் கோயில் எனப்படும்.

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என கூறியதும் உணரத்தக்கது.

ஆலயம் = ஆ + லயம். ஆ என்பது ஆன்மா. லயம் என்பது ஒன்றாகுதல், ஆன்மா இறைவனுடன் ஒன்றாகுதல் என்பது பொருள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவினிடத்திலுள்ளபால் தேகமெங்கும் செறிந்திருப்பினும் மற்றைய இடங்களிற் தோன்ருது முலையிலிருந்து தோற்றுவதுபோல இறைவன் தன்னை வழிபடும் அடியார்களுக்கு தயிரில் நெய் போல விளங்கி அருள்புரிவான்.

புறப்புறச் சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சமயம் எனநான்கும் தனித்தனி ஆறு வகைப்படும், இந்த நால்வகைச் சமயங்களிலும் தலையாய் விளங்குவது சைவசித்தாந்தமேயாம். இதனை

''புறச்சமயங்களைப்போக்கி ஆகம
நெறிச்சமயங்களை அரிது நேர்தல்''

என பிரபு லிங்க லீலை உணர்த்துகிறது. சிவனை முழு முதற் பொருளாக எண்ணி வழிபடுவது சைவ சித்தாந்த சமயம். அடங்கன்முறை சிவனே முழு முதற் தெய்வம் என்று கூறுகின்றது.

''திருக் கோயிலுள்ளிருக்கும் திருமேனிதன்னைச்
சிவ னெனவே கண்டவர்க்குச் சிவனுறைவனங்கே''

என்று சிவஞானசித்தியார் கூறுகின்றது.

பாதகன் முதல் ஞானிகள்வரை வழிபாடு செய்தற்குரிய இடம் கோயில். இறைவன் வழிபடுகின்றவர்களுக்கு ஒவ்வோர் காலவிசேடத்தால் தரிசனம் கொடுத்துத் திருவருள் புரிவார்.

''மாலறு நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே''

என்று சிவஞானபோதம் உணர்த்துகின்றது. சிவாலயத்தைச் சிவனெனக்கண்டு வழிபடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனை
சூழ்த்த மாமலர்தூவி"

என்று துதித்து வணங்க வேண்டும்.

"திருக்கோயிலில்லாத திருவிலூரும்" எனவும், "கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" எனவும் கோயில் கிராமங்களுக்கு அவசியம் என்பதை வலியுறுத்துகின்றன.

"உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பிரானுக்குவாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே"

என்று திருமந்திரமும்

"நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்த மன்பே
மஞ்சன நீர்ப் பூசை கொள்ள வாராய் பராபரமே"

என்று தாயுமானவரும் அருளியபடி மெஞ்ஞானிகள் உள்ளத்தைக் கோயிலாக ஞான உணர்வு கொண்டு வழிபட்டுவந்தனர்.

பூசலார் நாயனாரும் மனதினாலே கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்தார் என்று பெரிய புராணங் கூறுகின்றது.

"அடிமுதல் உபான மாதியாகிய படைகளெல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்ற மனதினால் வகுத்துமான
முடிவுறு சிகரந்தானு முன்னிய முழத்திற் கொண்டு
நெடிதுநாள் கூடக்கோயி னிரம் பிடநினைவாற் செய்தார்"

"நாலுபேர் போனவழியே போகவேண்டும்" என்பது பழமொழி. சமயகுரவர் நால்வரும் முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாலு நெறிகளிலும் ஒழுகி திருவருளினால் மெய்ஞ்ஞானம் பெற்று இறைவனடி சேர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்ணினால் அவர்விழாப் பொலிவுகாண் டார்தல"1 என்பதினால் ஆலயத்தில் நித்தியபூசை திருவிழா ஆதியவற்றை விதித்தமை சிற்றறிவினை யுடைய ஆன்மாக்களனைவரும் வழிபட்டு ஸ்ரீ பஞ்சாட்சரம் செபித்து திருவருட் பேற்றால் திருவடிப்பேறு பெறுதற் பொருட்டேயாகும். இவைகளெல்லாம் புறவழிபாட்டிற்கே அமைந்தன வாகும். புறத்திலே கட்டப்பெற்ற ஆலயம் அண்டத்தை விபரித்துக் குறிக்கும். புறத்தில் வழிபாட்டிற்கு (அண்டம்) எழுந்தருளியிருப்பதுபோல அகவழிபாட்டிற்கும் எழுந்தருளியிருக்கின்றார். (பிண்டம்)

"எண்டரு பூத மைந்துமெய்திய நாடி மூன்று
மண்டல மூன்றுமாகி மன்னிய புணர்ப்பினாலே
பிண்டமு மண்டமாகும் பிரமமே டைவராகக்
கண்டவர் நின்றவாறு மிரண்டினுங்காணலாகும்"

என்று வாதவூரர் புராணத்தினாலுமறியலாம். பிண்டமாகிய தேகமும் ஆலயத்தின் தன்மையைக் கொண்டுர நிற்கும். அகவழிபாடுமானத பூசையாகும்.

"உள்ளேவல் செய்வானைக் காந்தன் மிகவுகப்ப
உள்ளே செய்பூசை யுகந்து" என்பதனாலுமுணரலாம்.

## மூலத்தான மண்டபங்கள்

புறத்தே காணப்படும் ஆலயத்தில் கர்ப்பக் கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நான மண்டபம், அலங்காரமண்டபம், சபாமண்டபம் என்னும் ஆறும்: தேகத்திலுள்ள மூலாதாரம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்கினை என்னும் ஆறு ஆதாரங்களும் அறியப் படும்.

மூலத்தானம் (தலை) அர்த்தமண்டபம் (முகம் இதில் யோகசத்தியைப் பூசித்தல்) ஸ்நபன மண்ட பம் (மார்பு) நிருத்தமண்டபம் (துடை) கோபுரம்— வாசல் என்பதால் ஆலயம் ஒரு மனித்வடிவமாகும்.

## பிரகாரங்கள்

கோயிலில் மூன்று வீதிகள் அமைந்தால் முறையே தூலசரீரம், சூக்குமசரீரம், காரண சரீரம் என்று அழைக்கப்படும்.

ஐந்து வீதிகள்:— முதலாம் வீதி கண்ணுக்குப் புலப் படும். அன்னமய கோசமென்றும், (கோசம்—உடல்), இரண்டாம் வீதி பிராணமய கோசமென்றும், மூன்றும் வீதி மனோமய கோசமென்றும், நாலாம் வீதி விஞ்ஞானமய கோசமென்றும், ஐந்தாம்வீதி ஆனந்தமய கோசமென்றும் அறியப்படும். சில ஆலயங்களில் ஏழுவீதிகளும் உண்டு (ஸ்ரீரங்கம்)

கதவு:— ஆலயத்தின் மூலமூர்த்தி திருமேனியைத் தெரியவிடாது மறைத்து நின்று நீக்கியவழி காட்டி நிற்பது கதவு. ஆசை அவா தோற்றத்துக்குக் காரணமாய் மூர்த்தியைத் தெரியவொட்டாமல் மறைக்கும் அறியாமை நீங்கியவழி மூர்த்தி தரி சனம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NA-
JPL



திரைச்சீலை:- மறைப்பாக இடப்படும் திரைச் சீலையிலே மாயமாகியதிரை மூர்த்தியை அறிய வொட்டாது மறைப்பது என உணர்ந்து, திருவரு ளினால்நீக்கி ஞானக்கண் கொண்டு பார்ப்பவர் சிவகதியடைவர் என்று உணரப்படும்.

திருவாசி:- இது கோயிலில் மூர்த்திகளைச்சூழ்ந்து விளங்கும் வட்டவடிவமானது. அதன் உண்மை பிரணவரூபமாகும். பிரணவம் பிரமன் முதலி யோர்க்குப் பிறப்பிடமாகவும் சிவனுக்கு இருப்பிட மாகவுமுள்ளது.

கோபுரம்:- "கோபுரதரிசனம் கோடிபுண்ணியம்', என்பது பழமொழி. இது தூலலிங்கம் எனப்படும். அதுவுமன்றி உடலினமைப்பைப் பொருந்தியது. ஞானிகளின் இருதய பங்கயாசனத்தில் இறைவன் எழுந்தருளுவர். 'மலர்மிசை ஏகினான்'' என்பதில் ஏகினான் என்பதற்கு இருதய கமலத்தில் இறைவன் விரைவாகச் சென்றான் என்பது பொருள். இரு தயம்ஆன்ம தத்துவங்களை உட்கருவிகளாயுடையது. இருதயத்தின் கீழிடம் (பீடம்) பிருதுவிதத்துவ மாகவும் (தூபிமேற்பகுதி) முப்பத்தைந்து தத்து வங்களாகவும் கற்பிக்கப்படுகின்றன.

கொடிமரம்:- இதில் கொடியை ஏற்றிப் பூசிக் கப்படுவது. மூலத்தானத்திற்கு நேராக நிறுத்தப் பட்டுள்ளது. தம்பத்தைப்போல சரீரம் நேராக இருந்து பிரகாசிக்கும் இடைபிங்கலை நாடி வழி செல்லும் பிராணவாயுவை நடுநாடியில் நிறுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL

தியானிக்க பிராணவாயு நிற்கும். அந்தக்கரணம் முதலியவற்றல் பிரபஞ்சம் தோன்ருதிருக்க சிவ தரிசனமுண்டாகும்.

கொடிமரம் சிவனையும் கொடிச்சீலே ஆன்மாவை யும் கயிறு பாசத்தையும் குறிக்கும். படைத் தலுக்கு முன் ஆன்மாவும் வினையும் (பாசம்) ஒடுங்கி யிருந்து இறைவன் மாத்திரம் தோன்றும். இது கொடியேறு முன் உள்ள தம்பமாகும்

கொடிச்சீலேயில் ஆன்மாவைக் குறிப்பதாகிய இடபமும் ஆன்மாவை இரட்சிப்பதாகிய அத்திர தேவரும் கும்பம் முதலிய மங்கலப் பொருள்களும் எழுதப்படும்.

**பலிபீடம்:-** இது பத்திரலிங்கம் எனப்படும். பாசத்தை நீங்குவது (பலி) என்பது பொருள். அதாவது பாசத்தை நீக்கும் சிவசக்தி என்பர்.

**நந்தி:-** முத்தியடைந்த ஆன்மாவைக் குறிக்கும். மூலமூர்த்திக்கு (சிவன்) நேரே இருக்கும். முருகன் ஆலயம் - மயில்; கணேசர் கோயில் - எலி; ஐயனர் - யானை இவ்விதமாக ஊர்திகள் காணப்படும்.

**இலிங்கம்:-** பதி எனப்படும் பதி, பசு, பாசம் மூன்றும் சேர்ந்து நேராக இருக்கும்பதி என்றுண்டோ அப்போது பசுபாசம் உண்டு என்று உணரப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கடவுள்

வீட்டுக்கு எசமான் இருப்பதுபோல ஆலயங்களிலும் எசமான் இருக்கிறார். அவர்தான் கடவுள். இல்முன் முன்றில் (முற்றம்) என்பது இலக்கணப் போலி. அதுபோல் உள் + கட = கடவுள். உள்ளத்தைக் கடந்தவர். சூக்குசரீரம் தத்துவங்களினுலாயது. தத்துவங்களினுல்தான் உயிர் உடலில் நிலைபெறுகின்றது. கடவுள் தத்துவாதீதர் என்றழைக்கப்படுவர். உலகத்துக்கு கருத்தா சிவபிரான் என்று சைவவிஞவிடை உணர்த்துகின்றது.

சுத்தமாயாதீதர் ஸ்ரீகண்ட உருத்திரர் பிரமாவை அதிட்டித்துப் படைத்தலையும் விட்டுணுவை அதிட்டித்துக் காத்தலையும் கால உருத்திரரை அதிட்டித்து அழித்தலையும் செய்வர். ஆன்மதத்துவம் ஸ்ரீ கண்ட உருத்திரராலும்; வித்தியாதத்துவம் அநந்த தேவராலும் சிவதத்துவம் சிவனுலும், ஒடுங்கும். விட்டுணு முதலியோர் பிரகிருதிமாயையினர் (சகலர்). எனவே சிவன் முழுமுதற்கடவுள் எனப்படுவர். நிஷ்கனராகிய சிவன் நீக்கமற யாண்டும் நிறைந்து நின்றமையும் அச்சிவன் ஆன்மாக்களுடைய பாசங்களை நீக்குமாறு திருவருட்சத்தியாற் சங்கற் பித்தமையும், பராசத்தி முதலிய ஐவகைச் சத்திகளை 'பிறப்பித்தமையும் யாவரும் சதாசிவ நாயனுரைத்தியானித்து அர்ச்சித்து உய்யுமாறு பராசத்தி முதலிய ஐவகைச் சத்திகளினின்று சிவசாதாக்கியம் முதலிய பஞ்சசாதாக்கிய வடிவங்களையடைந்தமையும், இருபத்

யைந்து மகேசுர வடிவங் கொண்டமையும் பிரண வத்தினின்று தோன்றிச் சிவ முதலிய நவந்தரு பேதங்களாகியும் மாயையினின்று தத்துவங்களைத் தோற்றுவித்து ஆன்மாக்கள் பொருட்டு பஞ்ச கிருத்தியம் செய்தலும் தோற்றிய முறையே ஒடுக்கம் செய்து தாம் ஒரே பெற்றியாய் நிற்பர்.

விநாயகர் சுப்பிரமணியர் வைரவர் வீரபத்திரர் என்னும் திருமூர்த்தங்களும் முறையே சதாசிவமகேசுர வடிவங்களின்றும் தோற்றுதலால் அவற்றில் அடங்குவர், அவர்களும் சிவனினின்றும் வேறாகதவர்கள். சிவம் எனப்படுவர்.

**உருத்திரர் பதினொருவர்:-** சிவமூர்த்தியின் அருளைப் பெற்றவர்கள்.

**வித்தியேசுரர்;-** மகேசுவரரது சிறந்த அருளைப் பெற்றவர்.

**ஸ்ரீகண்ட உருத்திரர்:-** இவர் சைவகாமங்களை அறிவிக்கும் ஞாஞசிரியர் தேவர்க்கும் முனிவர்க்கும் நிக்கிரக அநுக்கிரகங்களைச் செய்யும் கருத்தா ஆவர்.

''ஒன்றுயிரு திறமா யோரைந்தா யையைந்தாய்
அன்றுதியின்மீட்டு மைந்தாய் அளப்பிலவாய்
நின்றுய் சிவனே யிந்நீர்மை யெலாந் தீங்ககற்றி
நன்றூவிகட்கு நலம் புரிதற்கே யன்றோ''

என்று கந்தபுராணம் உணர்த்துகிறது.

சிவன் மலபெத்தராகிய ஆன்மாக்கள் தம்மை அறிந்து வழிபடும் பொருட்டு அருவம் உருவம்

84109

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவுருவம் என்னும் மூவகைத் திருமேனி கொண் டருளினர் என்பதை ''ஒன்றாய் இருதிறமாய்'' என்று கூறினர். ''சிவன் அருவுரு மல்லன் சித்தி னோடு அகத்துமல்லன்'' என்பதும் அறிவுறுத்து கிறது. சிவன் திருவருட் சத்தியாகிய உமாதேவி யார் எவ்வண்ணமோ அவ்வண்ணமாய் அபேத மாய் நிற்பர். இதனை

''தன்னிலே மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்''

என்று உமாபதி சிவமும், ''சத்தியின்றிச் சிவ மில்லை சிவமின்றிச் சத்தியில்லை'' என்று சிவஞான சித்தியும் அறிவுறுத்துகின்றன.

## 3. மூர்த்திகளை பிரதிட்டை செய்தல்

''ஆதியுமந்தமுமில்லா அரும் பெருஞ்சோதி''

ஆகிய கடவுள் உருவமில்லாத வராயிருந்தாலும் அவரை நினைத்தற்கும் வணங்குதற்கும் உருவம் செய்யப் பட்டிருக்கின்றது. அவை கடவுளின் தன்மையைக் குறிப்பன.

பிரதிட்டை என்பது, கல்லிலேனும், செம்பு முதலிய உலோகங்களினாலும் விதிப்படி செய்யப் பட்ட திருவுருவங்களிலே வழிபாட்டை ஏற்று அநுக்கிரகித்தற்காகக் கடவுள் விசேடமாக எழுந் தருளுதற்குச் செய்யப்படும் கிரியையாகும் என்க. இதில் ஐந்து பிரதான பகுதிகள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கண்திறத்தல்
2. விக்கிரகசுத்தி
3. மந்திரம் முதலிய நியாசம்
4. தெய்வ ஆவாகனம்
5. கும்பாபிஷேகம்

கும்பாபிஷேகம் பன்னிருவருடங்களுக்கு ஒரு முறை நிகழும். இது நான்கு வகைப்படும்.

1. ஆவர்த்தம்
2. அனுவர்த்தம்
3. புனராவர்த்தம்
4. அந்தரீதம்

கிரியைகள் :— 64
36
18 வகையென வேறுபடும்.

## அபிஷேகம்

### கிரியை

**விநாயகர் வழிபாடு:-** விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமானை நினைத்து மும்முறை சிரசிலே குட்டி வணங்க வேண்டும்.

**தர்ப்பை அணிதல்:-** மோதிரம் போல தர்ப்பை யினூற் செய்யப்பட்டு அணிவிரலில் அணியப்படுவது.

**சங்கற்பம்:-** செய்யப்படுங் கிரியையில் மனத்தைப் பதித்து அதிலே கருத்துக் கொள்ளுதல் இன்ன நோக்கத்துக்காகச் செய்யப் போகிறேன் என்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் வலதுகையில் தருப்பை, பூ, அரிசி என்பவைகளை வைத்துக் கொண்டு வலதுகையை மேலாகவும் இடது கையைக் கீழாகவும் வைத்து வலது முழந்தாளில் வைக்குக. பெண்கள் இடது முழந்தாளில் வைக்குக.

## கும்பம் வைத்தல்

தம்பம் விம்பத்தில் இறைவனை வழிபடுதல் போல கும்பத்திலும் வழிபடுகின்றனர். கும்பம் உடம்பின் பாவனையாகும். கும்பத்தில் போர்த்த புடைவை தோலாகவும், நூல் நாடிகளாகவும், செந்நிறமண் இரத்தமாகவும், குடம் தசையாகவும், அதற்குளிட்ட பவுண் எலும்பாகவும், தேங்காய் தலையாகவும், மாவிலை தலைமயிராகவும், தர்ப்பை குடுமியாகவும், நியசிக்கப்பட்ட மந்திரம் உயிராகவும், சப்ததானியங்கள் ஆசனமாகவும் குறிக்கப்படும்.

சப்ததானியங்களை பரப்பி அதன்மேல் ஸ்நபன கும்பங்கள், உருத்திர கும்பங்கள் வைத்தல் கிரியை செய்தல். கிரியை செய்பவர் சரீரத்தைச் சிவரூபமாக்க வேண்டும். இது சைவத்துக்கு உயிர் போன்றது. மனம் அருள்வழியே சென்று கொண்டு இருக்கும் உலகிலுள்ள சடசித்துப் பொருள்களில் பற்றுவராது. தமது சரீரத்துக்கு வரத்தக்க துன்பங்களையும் மதியார். சரீர உறுபபுக்கள் சிவபூசைக்கு உரித்தாக இருக்கும் மநதிரம் பதிந்த கையினால் பாவச் செயல்களை செய்யத்துணியார் வாயிலும் தீயசொற்களைச் சொல்லார் தமது சரீரம் சிவன் சரீரம் என்று நினைக்க வேண்டும.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓமகுண்டம்:** அக்கினியை ஓமகுண்டத்தினுள் உண்டாக்கி அதைச் சிவசொரூபமாக்குதல் சிவத்தையும் சத்தியையும் பூசித்து அவர்களுடைய திருவருளினாலே கடவுளுக்குப் பூசை செய்தல் அக்கினி காரியம் எனப்படும். கும்பத்திலுள்ள மூர்த்தியை சிவாக்கினியில் பூசை செய்தலுமுண்டு. அதற்கு அடையாளமாக இரண்டையும் (குண்டம், கும்பம்) நூலினாற் தொடுப்பர். இது நாடி சந்தானம் எனப்படும். எள்ளு, நவதானியம், நெற்பொரி, சமித்து, நெய், நூல், சிருக்கு, சிருவம் முதலிய பொருள்கள் தேவை.

**சிருக்கு சிருவம்.** நெய் சொரிதற்குரிய பாத்திரம். இவை சிவசத்தியாகக் கருதப்படும்.

**ஆகுதி-** நெய்யை அக்கினியிற் சொரிதல்.

**கரிப்பொட்டு:** சிவாக்கினி சாம்பல் திருநீற்றுக்குச் சமன். தர்ப்பையை ஓமாக்கினியிற் சுட்டு நெய் சேர்த்துக் குழைக்கப்படுவது என்க.

## அபிஷேக ஒழுங்கு முறை

எண்ணெய்க்காப்புக்கு வாசனையூட்டப்பட்ட எண்ணெய், (சந்தனாதித் தைலம் விசேடம்)

**பஞ்ச கௌவியம்;** பால், தயிர், நெய் கோமயம், கோசலம் என்பன.

**பல பஞ்சாமிர்தம்;** பால், தயிர், நெய், சர்க்கரை முப்பழங்களையும் சேர்த்த தொகுதி.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிஷேக திரவியங்கள்; எண்ணெய், அரிசிமா, அபிஷேகக்கூட்டு மஞ்சள்மா, பஞ்சகௌவியம், பஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, கரும்பஞ்சாறு, எலுமிச்சைபழம், தோடம்பழம், மாதுளம்பழம், இளநீர், விபூதி, சந்தனம், குங்குமம் என்பவை. கடைசியாகச் சந்தனக்குழம்பு அபிஷேகம் நிகழும். பின் பூச்சாத்தி வழிபாடுநிகழும்.

இதன்பின் சங்கங்களேயோ அல்லது கும்பங்களேயோ வீதி பிரதட்சணமாகக் கொண்டுவரும் போது வேதாத்தியானம் திருமுறைஓதல், சகல உபசாரங்களுடனும் பக்தசனங்களும் பிரதட்சணம் செய்து கும்பத்திலுள்ள மூர்த்தியை இறைவன் திருப்பெரு வடிவத்தில் ஆவாகனம் செய்து முன் பூசித்த முறைப்படி அபிஷேகம் நிகழும். அபிஷேகம் செய்தவர்கள் (செய்விப்பவர்) பலன்கள் பெறுவர் என்று ஆகமம் கூறுகின்றது.

பாத்தியம்-இறைவன் திருவடியிலும், ஆசமனம்-இறைவன் திருமுகங்களிலும், அர்க்கியம-இறைவன் திருமுடியிலும் தீர்த்தத்தை விடுதல் என்க.

## பூசை

"முன்னவர் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வழங்குன்றுங்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தனனே"

என்பது - திருமந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கு நித்தியபூசைகள் நியதிப்படி நடைபெறாவிடின் அக்கோயிலுள்ள கிராமத்துக்கு கேடுகள் வரும். மன்னனுக்கும் கெடுதி வரும் என்பது உறுதி.

அபிஷேகம் முடிந்தபின் பூசை நிகழும், தூபம் தீபம் ஆராதனை இடம்பெறும். தூபம் மலத்தை நீக்கும். தீபம் ஞானத்தை விளக்கமாக்கும்.

ஒவ்வொரு தீபங்களிலும் உபகார சாதனங்களிலும் அந்தந்த அதிதேவர்களைப் பூசித்து அர்ப்பணஞ் செய்தல் வேண்டும்.

தூபத்தில் அக்கினியையும், தீபத்தில் சிவனையும், நாகதீபத்தில் கேதுவையும், இடப தீபத்தில் தருமதேவதையையும், மருகதீபம் விட்டுணுவையும், சூலதீபம் காளியையும், கமடதீபம் அரியையும், கசதீபம் கணபதியையும், புலிதீபம் துர்க்கையையும், சிங்கதீபம் தேவியையும், மயூர தீபம் கந்தனையும், பூரணகும்பதீபம் சிவனையும், தட்டில் பஞ்சபிரம மந்திரத்தையும், நட்சத்திர தீபம் நட்சத்திரங்களையும் (27) பூசிக்க வேண்டும்.

வாசனைப் பொருட்கள் (முகவாசம்) நைவேத்தியம் பிருதுவியாகவும், பால் அப்புவதாகவும் விளக்கு இரத்தினாபரணங்கள் அக்கினியாகவும் சாமரை வாயுவாகவும், மணி வாத்தியம் தோத்திரம் ஆகாயமாகவும் குறிப்பன. குடை கொடிமுதலிய உபசாரமும் நிகழ்வன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் நித்தியபூசை விழாக்காலங்களில் நடைபெறும் பூசைகள் நியமம் தவருது நடைபெற வேண்டும். காலே உச்சி சாயரட்சை அர்த்த யாமம் (இரவு 8மணி) என்று நான்கு காலப் பூசை நிகழும்.

இறுதியாகப் பஞ்சாராத்தி காட்டித் துதிப்பர். அதைத் தொடர்ந்து வேதபாராயணம், பஞ்ச புராணம் இடம் பெறும்.

கற்பூரதீபம் ஆன்மாக்களுக்கு சாத்துவிககுண முள்ளவர்களாக்கும். கற்பூரம் அக்கினி பற்றிய விடத்தே தன் வடிவு மறைந்து சோதி மயமாகி விளங்குவது போல ஆன்மாவும் சிவஞானக்கினி பற்றியவிடத்து பசுத்துவம் நீங்கி சிவத்துவம் விளக்கமுற்று நிற்கும் கற்பூரம் முழுவதும் புகையாகி ஆகாயத்துடன் அத்துவிதமாகுதல் போல ஆன்மாவும் தூல சூக்கும சரீரங்கள் அழிந்து இறைவனடி சேர்ந்து அத்துவிதமாகிப் பேரின்பப் பெருவாழ்வு பெறும் என்பது குறிப்பாகும்.

தறுகட்பாச:- கள்ளவினைப் பசு போதக் கவளமிடக் களித்துண்டு, என்பதினுல் கவளம் என்பது நைவேத்தியத்தைக் குறிப்பதாகும். காமம் குரோதம், மோகம், கொலே, மதம் என்பவை அமுது முகவாசம் என்பனவாகும்.

பூசைக்குரிய பூக்கள் பறிப்பதற்குத் தகுதி உடையவர்தான் பக்குவிகள் எனப்படுவர். தீட்சை பெற்று நியம ஆசாரமுள்ளவராயிருக்க வேண்டும். தானே விழுந்த பூ, அரும்பு உதிர்ந்தபூ, இரவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தபூ, சீலையிற்கொண்டுவந்தபூ பத்திரங்கள் பூசைக்கு ஆகாதனவாகும்.

## 4 திருவிழா

திருவிழா, சிறப்பு, உற்சவம் என்பன ஒரு பொருட் சொற்கள். ஆலயங்களில் நடைபெறும் திருவிழா கிரியை வழிபாட்டு முறைகள் என்பவற்றை அறிய சைவ மக்களுக்குதீவிர வேகம் ஏற்பட்டிருக்கின்றது.

நித்திய பூசைகள் நடைபெறுகின்ற போது தெரிந்தோ தெரியாமலோ ஏற்படும் குறைபாடுகளை நீக்கித் தெய்வீகத் தன்மையை உண்டாக்குவதற்காக வருடந்தோறும் திருவிழாக்களைச் செய்துவர வேண்டுமென்று சொன்னார்கள். ஒரு ஆலயத்தில் திருவிழா தொடங்கிவிட்டால் அக்கிராமத்தில் எவ்வகையான மங்கள காரியங்களும் செய்யக்கூடாது.

திருவிழா நாலுவகை.

| | |
|---|---|
| 1, மாங்கல்யம் | 3. பாவனம் |
| 2. சாந்திகம் | 4. சாகல்யம் |

சாந்நிகம்:- அலங்கார உற்சவம் எனப்படும்.

ஆசாரியர் வழிபாட்டிற்குச் செல்லுமுன் ஸ்நானம் செய்து தனது நித்திய அனுட்டான சந்தியா வந்தனங்களை முடித்துக்கொண்டு வழிபாட்டிற்கு ஒதுக்கப்பட்ட உடை அணிந்து கொண்டு ஆலயத்துள் சென்ற பின்பும் வழிபாட்

டிற்குமுன் மானதபூசை செய்து தன்னைச் சிவமாக்கிக் கொண்டு வழிபாட்டைத் தொடங்குகின்றார். அதேபோல அடியார்களும் சுத்தமாகச் செல்லவேண்டும்.

சிவபெருமான் ஐந்தொழிலையும் செய்து ஆன்மாக்களைக் காப்பாற்றும் முறையைத் திருவிழா குறிக்கும். கொடியேற்றம் படைத்தலையும் வாகனத்திருவிழா காத்தலையும், தேர்த்திருவிழா சங்காரத்தையும், மௌனத்திருவிழா மறைத்தலையும், தீர்த்தத்திருவிழா அநுக்கிரகத்தையும் உணர்த்துவனவாகும், திருவிழா தரிசனம் ஆன்மாக்களின் எவ்வித குற்றங்களையும் போக்கிவிடும். பூரணை அமாவாசை திதிகளைத் தீர்த்த தினமாகக் கொண்டே கூட்டி திருவிழாக்கள் ஆரம்பமாகும்.

**கொடியேற்று விழாவானது**- தம்பம், விம்பம், கும்பம் மூன்றிலும் இறைவனை எழுந்தருளச் செய்தலாகும். திருவிழா ஆரம்பம் கொடியேற்றம் மும்மலத்தில் மூழ்கிக்கிடக்கும் ஆன்மா திருவருளால் ஞானம் பெற்று இறைவன் திருவடிப் பேற்றையடையுந் தன்மையையுணர்த்தும்.

"நீபுரவா வையமெல்லா நீயறியக் கட்டினேன்
கோபுர வாசற்கொடி" என்பது கொடிக்கவி.

விநாயகர் வணக்கம்:- இத்தனை நாட்களாக விழாச் செய்யப் போகின்றோம். அதற்குத் தேவரீரின் அநுமதியைத் தந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கற்பம்:- ஆசாரியார் எசமான் கர்மம் செய்வதற்கு மனதில் தியானித்தல்.

புண்ணியாகம்:- பஞ்ச கௌவியத்தால் சுத்தம் செய்தல்.

கிராமசாந்தி வாஸ்துசாந்தி:- வைரவ மூர்திக்கு மேற்கு வீதியில் பூசை செய்தல், கிராமசாந்தி வீதியைச் சுத்தம் செய்தல், வாஸ்துசாந்தி எனப்படும் அதில் (வீதி) மண்வெட்டி முளையிடுதல் காப்புக் கட்டுதல் தான் தொடங்கிய கருமம் நிறைவுறும் வரையும் தம்மை எந்தவகையான ஆசௌசங்களும் பற்றாது இருக்கவேண்டும் என்பதற்காகக் காப்பைக்கட்டிக் கொள்ளுகிறார். பின் மூர்த்திகளுக்கும் காப்புக்கட்டுதல் வேண்டும்.

மேளமடித்தல்:- உலகத்துக்கு நன்மை உண்டாகவும் தேவர்களுக்குத் தீமைநீங்கவும் (அசுரர் விலகுதல்) மும்முறை தாளத்தைவாசித்து மேளம். அடிப்பர் இது பேரிதாடனம் எனப்படும்.

கும்ப பூசை:- திருவிழாவுக்கு இன்றியமையாதனவாகிய கொடிமரம், கொடிச்சீலை, அத்திர தேவர், பலிபீடம் ஆகியவற்றின் பிரதிட்டைக்காகக் கும்பம் வைக்கப்படும்.

கொடிப் பிரதட்சனம்; கொடிக்கு பஞ்சாளத்தி காட்டியபின் அத்திரதேவருடன் மங்களவாத்தியம் முழங்க வீதி புரதட்சனமாக வந்து தம்பத்தடியில் வைத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உற்சவமூர்த்தி புறப்பாடு:** வாகனத்தில் எழுந்து அருளச் செய்து பிரதட்சணமாகக் கொண்டுவந்து தம்பத்திற்கு நேரே வடக்கு முகமாக நிறுத்தி தீபாராதனை செய்தல் வேண்டும். தம்பபிரதிட்டை படப்பிரதிட்டை செய்தபின் தேவர்களுக்கு பிரீதி செய்து துவசத்தம்பத்தில் எழுந்தருளியிருக்க வேண்டிக் கொள்ளுதல்.

## கொடியேற்றக் கிரியைகள்

**தம்பப்பிரதிட்டை:** அபிஷேகம் பூசைசெய்து தம்பத்தில் மூர்த்தியை எழுந்தருளச் செய்தல். படத்தின்மேலுள்ள இடபத்துக்கும் அத்திரதேவருக்கும் அபிஷேகம் பூசை செய்தல் வேண்டும்.

காப்புக்கட்டுதல், தேவர்களை அழைத்தல், இடபதேவர் அருளைப் பெறல், கிரகதேவர் மகிழ்ச்சி அடையத் தானம் போடுதல் வேண்டும்.

**கொடியேற்றம்.** சுபமுகூர்த்தத்தில் மணியடிக்க வேதம் ஓத மங்கள வாத்தியம் முழங்க தேங்காய் உடைத்து விநாயக் கடவுளை வணங்கி கொடியை ஏற்ற வேண்டும். பின் தம்பத்திற்கு அபிஷேகம் பூசை செய்தல் வேண்டும். பலிப்பீட பூசையும் நடைபெறும். அத்திரதேவரின் தெய்வஆவாகனம் ஆனபின் ஆசீர்வாதம் சொல்லப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமி வெளிவீதி வருதல்

**பலிபீடத்துக்கு பிரதிட்டை;** காப்புக் கட்டுதல் முடிந்தபின் சுவாமி வெளிவீதி வரும். உள்வீதி பிரதட்சணமாக சுவாமி வந்தவுடன் யாகசாலையில் கும்பமூர்த்திக்கு விசேட பூசை நடைபெறும். உற்சவகாலத்தில் பிரதான அம்சம் மகாயாகமாகும். ஆலயத்தில் முதலாவது வீதியில் வடகிழக்குத் திசையில் மேற்கு வாசலாக அமைக்கப் படுவது யாகசாலையாகும். யாகத்தடிக்கு வந்ததும் யாகதரிசனூர்தம் பின் சுவாமிக்குப் புஷ்பாஞ்சலி சமர்ப்பித்து வேதாத்தியானம் பஞ்சபுராணம் செய்து வழிபட வேண்டும்.

சுவாமி வெளிவீதி வரும் போது வாயில் முன்நிலையில் பிரமாவையும் திக்குப் பாலகரையும் வரவழைத்து சங்கீதம் முதலிய உபசாரங்கள் செய்யப்படும்.

சுவாமி வெளிவீதிப் பிரதட்சணமாகி ஈசான மூலையில் வரும்போது விசேட வழிபாடுகளைச் செய்தல் வேண்டும். சித்தே சொல்லி தேவர்களை இருப்பிடங்களுக்குச் சென்று வாருங்கள் என்று வேண்டிக் கொள்வது, சுவாமியை வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளச் செய்து நைவேத்தியம் வைத்துப் பூசைசெய்தல் அதன் பின் வைரவக் கடவுள் பூசையும் செய்து சண்டேஸ்வரர் பூசையும் முடித்து அவரிடம் பூசாபலனைத்தந்தருள வேண்டிக் கொள்ளுதல் வேண்டும். அதன்பின் உபயகாரருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL



பூசாபலத்தைக் கொடுத்து விபூதிப் பிரசாதம் வழங்கி அடியார்களுக்கும் பிரசாதம் வழங்குதல் வேண்டும்.

வழமை போல ஒவ்வொரு நாளும் பகலிலிலும் இரவிலும் அத்திரதேவரை எழுந்தருளச் செய்து எட்டுத் திக்கிலும் பலியிடுதல் மலபரிபாகம் வரச் செய்தல் என்பது குறிப்பாம்.

முதலாம் நாள் படைத்தலையும் இரண்டாம் நாள் நல்வினை தீவினைப் பயன்களையும் மூன்றும் நாள் சாத்வீகம் முதலிய முக்குணங்களையும், நாலாம்நாள் அந்தக்கரணங்களையும் (4) ஐந்தாம் நாள் ஞானந்திரியங்களையும் (5) ஆறும் நாள் காமம் குரோதங்களையும் (6) ஏழாம் நாள் எழுவகை மந்திரங்கள் பதிதலையும், எட்டாம் நாள் பாசஞான நீக்கமும் ஒன்பதாம் நாள் மும்மல நீக்கமும் பத்தாம்நாள் சிவானந்தப்பேறும் குறிப்பதாகும். எல்லாத் திருவிழா நாள்களிலும் இவை அமைய வகுக்க வேண்டும்.

## தேர்த்திருவிழா

சில ஆலயங்களில் ஒன்பதாம் நாளிலும் தேர்த் திருவிழா நடைபெறும். தேரானது மந்தரமலையை அச்சாகவும், சூரிய சந்திரர் சில்லாகவும், வேதங்கள் நாலும் குதிரைகளாகவும் பதினுன்கு உலகு தட்டுக்களாகவும் அட்டமலைகள் தூண்களாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்கள் மணிகளாகவும், அமைக்கப்பட்ட இரதத்தில் சிவன் எழுந்தருளி மேருவை வில்லாக வும், விட்டுணுவை அம்பாகவும் அக்கினியை அம்பின் கூராகவும் வாசுகி நாணாகவும் கொண்டு பிரமனாகிய சாரதி பிரணவமாகிய சவுக்கினால் செலுத்தி திரிபுர அசுரர்களை மூவரையும் புன்முறுவலால் சங்காரம் செய்து நீருக்கினார் என்ற தத்துவத்தை உணர்த்துகின்றது. ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களை அழித்தல் இதனை

"முப்புரமாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே"

என்று திருமூலர் சொல்லுகின்றார் என்க.

## தீர்த்தத் திருவிழா

தீர்த்தத்திருவிழா காலையில் செய்தல் உத்தமம். ஏனையகாலம் மத்திமம் அதமமாகும். அது உள் வீதியில் செய்தல் கூடாது. அதில் அத்திர தேவர் தீர்த்தத்திலே முழுகுதல். அது திரோதான சத்தி பராசத்தியுடன் ஒன்றுதலைக் குறிக்கும். அடியார்கள் தீர்த்தமாடுவதினால் திரோதான சத்தியினாற் தாங்கப்பட்ட ஆன்மாக்களும் பராசத்தியிலே படிந்து சிவத்தைத் தரிசித்தலை உணர்த்தும்.

முதல் நாள் விழாவின் கிரியையை விளங்கிக் கொண்டால் கடைசி நாள் கிரியையும் தானே விளங்கும். கொடியிறக்கு விழாவுக்குக் கிரியைகள் கீழிருந்து மேல் நோக்கிச் செய்யப்படும் இவ்விழா அனுக்கிரகித்தலைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாககும்பம் மூலமூர்த்திக்கும் மற்றைய மூர்த்திகளுக்கும் முறைப்படி அபிஷேகம் செய்தல் பக்தசனங்களுக்கு நவதானியப் பயிர் தீர்த்தம் விபூதிப் பிரசாதம் கொடுத்தல் வேண்டும். பிரசாதங்கள் நிலத்தில் சிந்தாவிட்டால் காலில் மிதபட்டுப் பாவச்செயல் செய்கின்றவர்களின் பலனைப் பெறுவார்கள்.

## திருவூஞ்சல்

எழுந்தருளிக்கு ஊஞ்சல் பாட்டுப்பாடி ஊஞ்சல் ஆட்டுவதும் நிகழும்.

## கொடியிறக்குவிழா

சுவாமியைத் தம்பத் தடிக்குக் கொண்டுவந்து தம்பத்திற்கு அபிஷேக ஆராதனைகள் செய்து மங்கள வாத்தியம் ஒலிக்கக் கொடியிறக்கப் படுதல் வேண்டும்.

சுவாமி வாசலில் வந்ததும் சித்தே சொல்லி வசந்த மண்டபத்தில் வைத்து ஆராதனை வழிபாடு செய்தபின் சண்டேவரர் விழா நிகழும் எழுந்தரும் மூர்த்தியைப் போல திரு வீதி உலா (பிரதட்சணம்) செய்து திருவிழாமுடிவில் மூர்த்திகளுக்கு கட்டிய காப்பை அவிழ்த்து விடுதல் வேண்டும்.

## விழாக்காலத்தில் வாத்தியம் இசைக் கருவிகள் ஒலித்தல்

கடவுளிடத்தில் அன்புண்டாவதற்குச் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தநாதத் தொனிகள் என்பர். வாத்தியங்களை முழக்குவோர் முழக்குவிப்போர் தேவருலகன்றி முத்திகூடார்.

சிவ யோகிகள் பிராணவாயுவை நிறுத்தி குண்டலியை எழுப்பி ஆறுதாரங்களிலுள்ள மூர்த்திகளைத் தரிசித்து ஆறுதாரங்களுக்கு மேலாய் விளங்கும் பிரமரந்திரத்திலுள்ள சந்திர மண்டலத்தை இளகச்செய்து அமிர்தப்பிரவாகத்தை நாடிகளில் நிரப்ப அவைகளில் தசநாடிகளினின்றும் சதங்கை முதலிய ஒலி ஓசைகள் கேட்டல் காட்சி என்றும் அதனுல் மெஞ்ஞானம் உதிக்கப்பெற்று பிறவா முத்தியடைவர் என்பதுவும் உணர்க. நாம் ஒவ்வொருவரும் அந்த ஒலிவகைகளை (நாதம்) கேட்டுய்ய வேண்டுமென்க.

" இத்திறமான யோகசாதனையில்
இருந்து சாதிப்பவர் தமக்குச்
சுத்தமா நாதத் தொனிகளும் பலவாத்
தோன்றிடு மணி குழல் மேகம்
மத்தளம் பேரி யாழொலி சிலம்பு
வளை கிணி தாளமென்றுமையாட்
கந்தனு மொழிந்தான் அன்றியுமரவோர்
ஆயந்தெடுத்துரைத் தனரே "

என்பது - நிஷ்டானுபதி

சிவபெருமான் திருமேனி நாதவடிவமாதலின் அதனுண்மை விளங்க விழாக் காலங்களில் கீத நாதம் பாடப்படுதல் வேண்டும். அது செய்தோரும் பேரின்பப் பேறுபெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதி சூடு
மண்ணலாரடி யார்தமை யமுது செய்வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவுகாண்
-டார்தல "

என்பது - பெரியபுராணம்

## 5. திருக்கோயில் வழிபாடு

கோயிலில் காலந்தவருது காலை உச்சி மாலை அர்த்தயாமம் என்னும் காலங்களில் நித்தியபூசை முதலியன நடைபெறுதல் வேண்டும். காலந் தவறினால் கிராமத்துக்கு கேடு உண்டாகும் என்பது திருமூல நாயனார் வாக்கு.

கோயிலுக்குச் செல்லுமுன் தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து நித்திய கருமம் முடித்துக் கொண்டு அர்ச்சனைப் பொருட்கள் கொண்டு நடந்து போதல் வேண்டும். பொருளில்லாதவர் பத்திரபுட்பம் கொண்டு போகலாம்.

கோயிலைச் சமீபித்தவுடன் கால் கழுவி ஆசமனஞ் செய்து கோபுரத்தை தரிசித்து இரு கைகளையும் சிரசில் குவித்துக் கொண்டு சிவ சிவ என்றும் பின் தோத்திரம் பாடிக்கொண்டு உள்ளே போகவேண்டும்.

பலிபீடத்துக்கு முன்பாக விழுந்து வணங்தல் வேண்டும். அபிஷேகசமயம் நிவேதன சமயம் அல்லாத காலத்தில் ஆடவர் அட்டாங்க நமஸ் காரமும் பெண்கள பஞ்சாங்க நமஸ்காரமும் பண்ண வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டாங்க நமஸ்காரம்:- மார்பு பூமியில் படும் படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின் னும் நேரே நீட்டி பின் அம்முறையே மடக்கி வல இடப் புயங்கள் மண்ணிலே பொருந்த கைகளை அரையை நோக்கி நீட்டி வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தும்படி செய்தல். இவ்வணக்கம் பிறவியாகி கடலை நீந்தி முத்திக்கரையைச் சேருவதன் உண்மைப் பொருள்.

பெண்கள் தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் உறுப்புகள் நிலத்தில் பொருந் தும்படி வணங்குதல் வேண்டும். திரயாங்க நமஸ் காரம், சிரசிலே இருகைகளையும் குவித்து வணங் குதல்.

துவாரபாலகரை வணங்கி பின் நந்தியை வணங்கி அனுமதி பெற்று உள்ளேபோய் விநாயக கடவுளை தரிசித்து பின் மூலமூர்த்தியை வணங்க வேண்டும். பூசை முடிந்தபின் அர்ச்சனை செய் விக்க வேண்டும்.

அர்ச்சனைப் பொருள்கள் தத்துவம்:-

தேங்காய் உடைப்பது எதற்கு? ஆன்மா சத்துவ குணமடைந்து இறைவனுடன் ஐக்கியப் படுவதற்கு என்றுதான் விடை சொல்லலாம் தேங்காய் மட்டை சிறட்டை தேங்காய் - முறையே இராசத தாமத சத்துவகுணங்களையும், இளநீர் ஆன்மாவையும் குறிக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதயத்தை இருபிளவாக்கினால் வெற்றிலை நரம்பு போல இருக்கும் நடு ஒருஅங்குலப் பிரமாணம் ஆகாயமென்றும் அதன் மத்தி பரம்பொருள் உண்டு என்றும் குறிக்கும். அதுபோல் அர்ச்சனைப் பொருள் வெற்றிலையும் இருக்கும் வாழைப்பழம் எதற்கு எனின் இருதயத்தை இடை பிங்கலை நாடிகள் பொருந்தியுள்ளது நாடிகளைக் குறிக்கும். வெற்றிலையில் வாழைப்பழம் வைப்பர் பாக்கும் வெண்மையானது, பூசைக்கு இப்பொருள்களை வைப்பது பிராரத்துவ வினையைச் செய்து முடித்தற்கு எண்ணுவது போலும் பிராரத்துவம் முடிய ஆன்மாவும் சூக்கும சரீரத்தை விட்டு நீங்கிப் பரமாத்துவாவுடன் சேரும் என்க.

அடியார்கள் தொண்டு:- திருவிழாக்காலத்தில் சுவாமி காவுதல், தீபம் ஏற்றுதல், சங்கு ஊதுதல், மணிஅடித்தல், கூட்டுதல், மெழுகுதல், கழுவுதல், யாகப் பொருள் தேடிக்கொடுத்தல், மாலை கட்டுதல், பசனை திருமுறை பண்ணோடு ஓதுதல் என்பன. தீர்த்தக் கேணியை அசுத்தம் செய்யக் கூடாது.

அடியார்களுக்கு திருவிழாக்காலம் தீட்சைக் காலமாகும். தீட்சை பெறுங் காலத்தில் நடக்க வேண்டிய விதமாக அக்கிராமத்திலுள்ளவர்களும் அயற் கிராமத்திலுள்ளவர்களும் நடந்து கொள்ளுதல் வேண்டும். ஆடு கோழிகளைக் கொலை செய்யாமலும் மது மாமிசம் உண்ணாமலும் நல்லொழுக்கமுள்ளவராய்க் கோவிலுக்குச் செல்லுதல் வேண்டும். உபயகாரர் திருவிழாவுக்கு கலைநிகழ்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகளுக்கு உரியவர்களை அழைத்து மது மாமிசம் உண்ணவும் கொடுத்து உதவுகிறார்கள். தீராத துன்பத்துக்குள்ளவராய் நரகத்தை அனுபவிப்ப ரன்றோ? கோயிலில் வாத்தியங்கள் வாசிப்பவர் ஓதுவார் ஆசாரசீலர்களாக விளங்கவேண்டும்.

நான் சிவபுண்ணியத்தைச் செய்கிறேன் என்பது தவறு, கோயிலில் எரிந்த விளக்கு அணையும் நிலையில் எலி அதன் நெய்யை உண்ணச் சென்று வாய்வைக்க விளக்குச் சுட்டது. வாயை எடுக்க விளக்குத் தானாக எரிந்தது. எலிக் கிட்ட சிவபுண்ணியமாகி மாவலிச் சக்கரவர்த்தி யாகப் பிறந்தார்.

மனிதரிலும் இதுபோன்ற செயல்களைச் செய் பவர் உளர். பூவியாபாரி பூந்தோட்டங்களை வைத்து பாதுகாத்து பூப் பறித்து மாலைகட்டி விற்க, சிலர் வாங்கிச் சென்று சுவாமிக்குச் சாத்தியும், சாத்து வித்தும் வழிபட அதனால் பூ விற்றவருக்கு புண் ணியம் உண்டாகின்றது.

"ஆம் பொருள் நமதேயானல் அறம் பிறர்க்காவதுண்டோ என்பதினாலும் உணரலாம். சாத்துவிப்போருக்கும் பொதுச் சிவபுண்ணியம் உண்டாகின்றது.

இவ்வாறன்றி சிவனது முழுமுதற் தன்மையை உணர்ந்து தொண்டு புரியுக்கருதி சரியை கிரியை யோகங்களைச் செய்தல் சிறப்புப் புண்ணியங்கள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணக் கிரியை ஆலய சேவை விதிகளுக்கு விரோதம்

ஆலயங்களில் பூசைகள் நிகழ வேண்டிய சமயத்து விவாகக் கிரியைகள் நிகழின் பூசைகள் முட்டிடுவதினால் கேடுண்டாகும். அடியார்களுக்கு விவாகக் கிரியைகள் தடையாக இருக்கும். ஆலயந் தொழக் கோயிலுக்குச் செல்லுவோருக்கு அங்கு நிகழும் திருமண ஆரவாரங்கள் மன அமைதியைக் கொடாது. ஏன் வந்தேன் என்ற எண்ணத்தை விளைவிக்கும் என்க. திருமணம் கோவிலில் நிகழுமாயின் அவை சைவக் 'கோவில்கள் அல்ல என்று நாவலரும் குறிப்பிடுகின்றார். ஆலயங்களில் இறைவனுக்குரிய கிரியைகள்தான் நடைபெற வேண்டும். மற்றவை தவறு.

ஆண்டுதோறும் கோயிலில் கும்பாபிஷேக தினம் திருவிழா சட்டி விழாக்களில் கடவுளர்க்குத் திருக்கல்யாணம் நடைபெறும் என்று ஆகமம் கூறுகின்றது.

ஆலயத்தை மெய்யன்புடனே ஒருசாமம் அங்கப் பிரதக்கணம் செய்வோர் தமது தீவினைகள் எல்லாம் நீங்கப் பெற்று சாலோக்கிய பதவி பெற்று பின்னர் மாயை ஒடுங்கும்போது முத்தியையும் அடைவர்.

''ஒரு யாமம் வலம் புரியினுடலின்'ற்
தீவினைகள் ஒருவுமெல்லாம்
கருவாதை யிலர் மண்ணிற் சிவலோக
மடைந்து களிப்புறவே வாழ்வர்
— அருணகிரி புராணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. விரதமாவது

மனம் பொறிகளின் வழிப்போகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்குக் காயத்தினால் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதலாம்.

"நோன்பு என்பது கொன்று தின்னாமை" எனப்படும். விரதங்கள் பலவகைப்படும். சுப்பிரமணியர் விரதங்கள் விநாயகர் விரதங்கள் சிவபெருமான் விரதங்கள் சக்தி விரதங்கள் என்பன.

## காவடி எடுப்பதின் தத்துவம்

கா + அடி = காவடி. சரண் புகுந்தாரைக் காப்பவர் என்பது பொருள். முருகன் ஆலயங்களில் நேர்த்திக்கடனுக்கு காவடி எடுக்கின்ற பக்தர்கள் அனேகர், உலக இன்பங்களை வேண்டி காவடி எடுப்பது உபாயகாவடியாகும்.

உண்மைக்காவடி, ஒருமுறை பார்வதி திருக் கல்யாணத்திற்கு தென்திசை தாழ்ந்தது. அகத் தியரை வடதிசைக்கு அனுப்பினார் சிவன். அகத் தியர் திருக்கலியாண கோலம் தரிசிக்க இமய மலையில் அடையாளந்தர வேண்டுமென்று கேட்க, சிவன் பக்கத்திலிருந்த சிவகிரி சத்திகிரி இரண் டையும் கொடுத்தார். இடும்பன் என்பவனை இரு மலைகளையும் தூக்கிக் கொண்டு வரப்பணித்ததும் மூங்கில் தடியில் காவடிபோலக் கூவிக் கொண்டு

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து பழநியில் வைத்தான். சிவகிரியின் மீது பழநி ஆண்டவராகிய பாலகுமாரன் தோற்றி தரிசனம் கொடுக்க அகத்தியர் பேரின்ப நிலை எய்தினுர் என்பது வரலாறு.

விரததினம் பெண்கள் சுத்தமாக இருக்க வேண்டும். வீடு மெழுகி சுத்தமிட்டு நல்ல உணவு களைச் சமைக்க வேண்டும். விரதகாலத்தில் மனதை அடக்க வேண்டும்.

''கெடுக்கவல்லதும் கெட்டவர்தங்களை
எடுக்கவல்லதும் இம்மனம்''

என்பதினுலும் அறிவு இருந்தால் தான் மனதை அடக்க முடியும். மனதை அடக்கும் செயலால் தான் நாம மனிதன் ஆகின்றேும். இல்லாவிடின் தீவினைக்காளாகி நரகில் விழுந்து துனபுறுவோம். மனத்தைச் சுத்தமாக்குவதறகுத்தான் விரதம். நல்ல மனதுக்கு, ஞானம் பெற விரதம் அநுட்டிக்க வேண்டும்.

கெட்ட மனதை விரதத்தினுல் நல்லமன மாக்கி மோட்சத்தைப் பெறலாம். மனிதப் பிறவியை இனிப்பிறவாவழியில் பயன் படுத்த வேண்டும். நேற்று இருந்தான் இன்று இல்லை எனபது உலகு.

விரதகாலத்தில் அரைவயிறு சாப்பிடுதல் வேண்டும். நிரம்ப உண்டால் தீய எண்ணங்கள் சோம்பல வந்து தமோ குணவயப் படுகின்றேும். சைனர் உயிர்களைக் கொல்லாது வாழுகின்றனர். விரதத்துக்கு பரிசுத்தம் வேண்டும். மனம் அனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஆகாசம் போன்றது. அணுவின் குணம் சுருங்குதலும் விரிதலும். விரதத்தின் பூர்த்தி நிலை உத்தியானம் எனப்படும். விரதமனுட்டித்துத்தான் காவடி எடுக்கின்றார்கள்.

## 7. பஞ்சபுராணம்

தமிழ்வேதமாகிய தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் என்பவற்றின் மகிமையும் பொருளும் விளங்குதல் அரிது. ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் உண்மைப் பொருள் எனப்படும் உட்பொருள் ஆன்மாமல நீக்கம் பெற்று சிவத்தையடைதல் என்க. பண்ணுடன் ஓதினால் பக்தி வைராக்கியம் உண்டாகும்.

"வாசக னெனு மொருமா மலைபொழிந்த
வாசக மெனு பெருநீர் ஒழுக்கி
ஓதுவர் மன மெனும் ஒண் குளம்பு குந்து
நாவெனு மதகில் நடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
உளமெனும் நிலம்புக ஊன்றிய அன்பாய்
வித்திற் சிவமெனும் மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே"

❁ ❁ ❁

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL



## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி
யென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்
பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெம்மானிவனன்றே. (1)

## திருவாசகம்

மெய்தானரும்பி விதிர்விதிர்த் துன் விரையார் கழற்
கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி
யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயபோற்றி
யென்னும்
கைதான் நெகிழவிடே னுடையா யென்னைக்கண்டு
கொள்ளே (2)

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வு சூழ் கடந்த தோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துட் சித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தா யைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய்மண்டபத்துள்ளே புகுந்து புவனியெலாம் விளங்க
அன்ன நடை மடவாளுமை கோனடி யோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே (4)

## பெரியபுராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம் படி வாழ்த்தி வணங்குவாம்

திருச்சிற்றம்பலம்

84109

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிடைக்குமிடம்;

# சுதா தாகம் தனியகம்

15, பேருந்து தரிப்பு நிலையம்,

வவுனியா.

சுவர்ணா அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org